1

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]

Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 59 ]

Total No. of Questions : 59 ]

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**

**Code No. : 10-T**

**D**

**CCE PR**
**UNREVISED**
**REDUCED SYLLABUS**
**NSR & NSPR**

**Question Paper Serial No. 813**

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ— ತಮಿಳು

## Subject : First Language — TAMIL

**(ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. & ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)**

**(Private Repeater / NSR & NSPR)**

ದಿನಾಂಕ : 12. 06. 2023 ] [ Date : 12. 06. 2023

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-45 ರವರೆಗೆ ]

[ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 59-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக :** **10 × 1 = 10**

1. செய்யுளுக்கே உரியதாய் நிற்கும்

   (A) பெயர்ச் சொல் (B) வினைச் சொல்

   (C) இடைச் சொல் (D) உரிச் சொல்

2. சொற்கள் பல அடுக்கி வரும்

   (A) இரட்டைக் கிளவி

   (B) இரட்டுற மொழிதல்

   (C) அடுக்குத் தொடர்

   (D) அளபெடை

3. ஐந்து சீர்களைக் கொண்டது

   (A) குறளடி (B) சிந்தடி

   (C) அளவடி (D) நெடிலடி

4. செப்பலோசை உடையது

   (A) வெண்பா (B) ஆசிரியப்பா

   (C) கலிப்பா (D) வஞ்சிப்பா

5. பொதுப் பொருளே சிறப்புப் பொருளாகும்

(A) வேற்றுமையணி

(B) வேற்றுப் பொருள் வைப்பணி

(C) பிறிது மொழிதல் அணி

(D) பின்வரு நிலையணி

6. பகைவரின் மதிலை முற்றுகையிடுதல்

(A) வெட்சி (B) வஞ்சி

(C) காஞ்சி (D) உழிஞை

7. செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்று போல் வருவது

(A) எதுகை (B) மோனை

(C) இயைபு (D) முரண்

8. தேம்பாவணி =

(A) தேன்பா + அணி (B) தே + பா + அணி

(C) தேம்பா + அணி (D) தேம் + பாணி

9. 'மடமட' என்பது

(A) இரட்டைக் கிளவி (B) இரட்டுற மொழிதல்

(C) அளபெடை (D) அடுக்குத் தொடர்

10. 'யாப்பு' என்பது

(A) உரைநடை (B) அளபெடை

(C) செய்யுள் (D) அந்தாதி

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக :** **5 × 1 = 5**

11. தமக்கென வாழ்வோர் - கடுகு உள்ளம்;

பிறர்க்கென வாழ்வோர் : .......................... .

12. ஆதிக்கவி பம்பன்;

மகாகவி : .......................... .

13. தென்னங்கீற்று;

பனை : .......................... .

14. 'கொடுக்க கொடுக்க' - செல்வம் பெருகும்;

படிக்க படிக்க : .......................... .

15. தாயிற் சிறந்த - கோவிலுமில்லை;

தந்தை சொல்மிக்க : .......................... .

**III. ஒரு தொடரில் விடை தருக :** **8 × 1 = 8**

16. இறைவன் ஆனந்த மாகடலாவது எப்போது ?

17. எவ்வெவற்றை நீக்கி வாழ்வது அறமாகும் ?

18. தலைவி என்ன சமைத்தாள் ?

19. ஓசோனின் எமன் எனப்படுவது யாது ?

20. இளைஞனின் நண்பன் எது ?

21. பம்பன் இயற்றிய இருநூல்கள் யாவை ?

22. அணி என்பது யாது ? அதன் வகைககள் யாவை ?

23. தினம் தினம் ''என்னுடைய நாடே'' என்று பாடப்படும் 'நாடு' எது ?

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 15 × 2 = 30**

24. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்பு நலன்கள் யாவை ?

25. மகன் தந்தைக்கு செய்யும் உதவி யாது ?

26. பெண்கள் எதை வெட்டிவிட்டோமென்று கும்மியடித்தனர் ?

27. பொருந்தா இயல்புடைய இரண்டு உயிர்கள் யாவை ?

28. திரு.வி.க.-வை 'வானம்பாடி' என அழைப்பதற்கான நோக்கம் யாது ?

29. கடுகு உள்ளம் கொண்டோரின் குணங்கள் என பாரதிதாசன் கூறுவன யாவை ?

30. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு என்ன ?

31. சிந்தனைக்கு விருந்தாக அமையும் விடுகதை ஒன்றினை விளக்கி வரைக.

32. தாய், தந்தை மற்றும் அரசன் செய்ய வேண்டிய கடமைகளாக பொன்முடியார் கூறுவன யாவை ?

33. இறந்தகாலம் குறித்து வைரமுத்து கூறுவன யாவை ?

34. உடலுக்கும், செவிக்கும் இன்பம் தரவல்லவை யாது ?

35. நீதிச்சாரம் என்ற நூல் பற்றி எழுதுக.

36. தொடை எனப்படுவது யாது ? அதன் வகைகள் யாவை ?

37. 'யாப்பு' என்பது யாது ? அதன் உறுப்புகள் யாவை ?

38. அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி வேறுபாட்டினைக் குறிப்பிடுக.

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : $6 \times 3 = 18$**

39. உழவின் மேன்மையை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

40. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை ?

41. பூமியில் வெப்பம் அதிகரிக்கும் போது ஏற்படக் கூடிய விளைவுகள் யாவை ?

42. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்புவான், அதனால் அவனுக்கு ஏற்படும் பாதிப்புகள் யாவை ?

43. மாணிக்கவாசகர் சிவனைப் போற்றி வணங்கும் சிறப்பினை எழுதுக.

44. வெண்பாவின் இலக்கணத்தை விவரி.

**VI. குறிப்பு வரைக :** **2 × 3 = 6**

45. சிறு பஞ்ச மூலம்

46. பாவேந்தர் பாரதிதாசன்

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக :** **1 × 3 = 3**

47. வேற்றுப் பொருள் வைப்பணி

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :** **4 × 3 = 12**

48. ''ஆதியே நடுவே அந்தமே''

49. ''ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே''

50. ''அவர்கள் வாழ்வில் ஒருபோதும்
வெறுப்பு கொள்ள மாட்டார்கள்''

51. ''பாவம் கொஞ்சம் நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும்.''

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக : 1 × 3 = 3**

52. ''ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்''.

*அல்லது*

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்''.

**X. அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4**

53. ''இனிமைத் தமிழ்'' எனத் தொடங்கும் பாடல்.

*அல்லது*

''இம்பர்வான்'' எனத் தொடங்கும் பாடல்.

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : 2 × 4 = 8**

54. இலட்சியம் பற்றி வைரமுத்து கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

55. பேராசிரியர் சேதுப்பிள்ளையின் உரையாடலை தொகுத்து எழுதுக.

*அல்லது*

முனைவர் சித்தலிங்கய்யா உழைக்கும் மக்களை எவ்வாறு படம் பிடித்துக் காட்டுகிறார்?

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக : 1 × 4 = 4**

56. ''இளமைப் பருவத்து கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளண்மை குற்றம்
கிளைஞரின் போழ்தில் சினம் குற்றம்
குற்றம் தமரல்லார் கையகத்து ஊண்''.

*அல்லது*

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி''.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக : (2 × 2 = 4) 1 × 4 = 4**

57. கன்னடத்து முதற் கவிஞர் பம்பன். முதன் முதல் இலக்கியமான ஆதிப்புராணத்தைப் பாடி கன்னட இலக்கிய வரலாற்றைத் தொடங்கி வைத்திருப்பதால் ஆதிக்கவி என்னும் பெருமையைப் பெறுகின்றார். ஆகவே இவரது காலம் 10 முதல் 12 ஆம் நூற்றாண்டு வரையிலான காலக் கட்டத்தைப் 'பம்பன் காலம்'' என்று அழைப்பது வழக்கம்.

இவரது காலம் பொற்காலம், வீரகாலம், ஷாத்ர காலம், சமணர் காலம், உரைநடைக் காலம் எனவும் வழங்கப்படுகிறது.

இவருடன் இக்காலத்தில் வாழ்ந்த ஒன்னன், ரன்னன் ஆகியோரையும் சேர்த்து கன்னடத்து மும்மணிகள் என்று பெருமையுடன் அழைப்பதும் உண்டு.

இம்மூவரும் முதல் நூலை அடி நூலாகவும் மற்றதைப் பொருள், நூலாகவும் படைத்திருப்பது சிறப்பாகும்.

வினாக்கள் :

a) பம்பன் வாழ்ந்த காலம் யாது ?

b) கன்னடத்து மும்மணிகள் யாவர் ?

**XIV. மடல் எழுதுக :** **1 × 5 = 5**

58. நீ கண்டுகளித்து வந்த சுற்றுலாவைப் பற்றி உன் நண்பனுக்கு மடல் எழுதுக.

*அல்லது*

நீ வசித்து வரும் பகுதியில் சாலைகளைச் சரியாக அமைத்து தர வேண்டி மாநகர ஆணையருக்கு விண்ணப்பம் எழுதுக.

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக:** **1 × 5 = 5**

59. ''தாய்மொழி வழிக் கல்வி''

*அல்லது*

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''